# பாரதியார் தப்பிச் செல்ல உதவிய சென்னைப் பிரமுகர்

ஒரு விதத்தில் முடிச்சுகள் பல கொண்ட புதிரான வாழ்க்கைதான் பாரதியாருடையது. அவற்றில் சில இன்றுவரை அவிழ்க்கப்படாமலும் உள்ளன.

பாரதியார் மட்டும் சரியான தருணத்தில் புதுச்சேரிக்குத் தப்பிச் செல்லாமல் இருந்துவிட்டிருந்தால் ஆவேசம் மிக்க அவரது படைப்பாற்றலின் பயன்கள் தமிழுக்கு முழுமையாகக் கிடைத்திருக்குமா என்பது சந்தேகம். ஏனெனில் சென்னையிலேயே அவர் இருக்க நேர்ந்து, அதன் விளைவாகப் பிடிபட்டு, உடல் வலுவையும், மன உறுதியையும் முறித்துப்போடும் அந்தக் காலத்து மனிதாபிமானமற்ற சிறைக் கொட்டடியில் இறக்கைகள் விரித்து சுதந்திரமாகப் பறக்க வழியின்றிக் கூண்டுக்குள்ளேயே சோர்ந்து கிடந்துவிட்டிருக்கக் கூடும்.

பாரதியாரின் கிரியாசக்தி முழு வீச்சில் இயங்கியது அவர் தப்பிச் சென்று, விடுதலைக் காற்றைச் சுவாசித்தபடி வசித்த புதுவையில் தான். அதற்கு ஏற்ற சுற்றுச்சூழலும், சஹ்ருதயர்களின் சக வாசமும் அங்குதான் வாய்த்தன. அவரது அருமையை நன்குணர்ந்திருந்த ஸ்ரீ அரவிந்தர், வ.வே.சு. ஐயர், மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார், எஸ்.என். திருமலாச்சாரியார் ஆகியோரது உறவாடலின் உத்வேகம் அளித்த தூண்டுதலில், உணர்ச்சிப் பெருக்கெடுக்கும் குறுங்காவியமான பாஞ்சாலி சபதம், தெளிந்த நீரோடையென விரையும் வசன நடையிலான ஞானரதம், மேலோட்டமாகக் காதல் ததும்பும் தத்துவார்த்தச் செறிவு மிக்க குயில் பாட்டு முதலான அரிய படைப்புகள் அவரிடமிருந்து வீறு கொண்டு வெளிப்பட்டன. ஏறத்தாழப் பத்தாண்டு காலப் புதுவை வாசம் பாரதியை ஓர் அபாரமான படைப்பாளியாகத் தமிழுக்கு வார்த்தெடுத்துத் தந்தது.


குரு சக்கரத்தம்மாவுடன் நஞ்சுண்டராவ்

சுதந்திரக் கனலைத் தூண்டிவிடும் அக்னி எழுத்தாளர் பாரதியாரை வெளியே விட்டு வைப்பது ஆபத்து என்று அஞ்சிய பிரிட்டிஷ் அரசு, அவரைக் கைது செய்யத் திட்டமிட்டுக் காய் நகர்த்திய போது, நல்ல வேளையாய் அதனை முன்கூட்டி அறிந்துகொண்ட நண்பர்களின் வற்புறுத்தலால் எவரும் அறியா வண்ணம் பாரதியார் புதுவைக்குத் தப்பிச் செல்ல முடிந்தது.

1908ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் ஒரு நாள் இரவு பாரதியார் சென்னை சைதாப்பேட்டையிலிருந்து ரயில் ஏறி இரவெல்லாம் கண் விழித்து புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்ததாகப் பாரதி வரலாற்றில் பதிவாகியிருப்பது நமக்குத் தெரியும். ஆனால் பாரதியார் புதுவைக்குத் தப்பிசென்றது குறித்து இன்னொரு தகவலும் அவரது சரித்திரத்தினுள் வெளியே தென்படாமல் புதையுண்டு கிடக்கிறது. இத்தகவல் வெளிப்பட வேண்டுமானால் டாக்டர் எம்.சி.நஞ்சுண்ட ராவ் என்கிற அந்தக் காலத்துப் பிரபல பிரமுகரின் சரித்திரத்தை நாம் அறிந்தாக வேண்டும்.

பாரதியாரைக் கைது செய்து இழுத்துச் செல்வதற்காக அவரைத் தேடி போலீசார் அலைந்தபோது அவர்களிடம் சிக்கிவிடாமல் அவர் சில நாட்கள் மறைவாக இருந்த இடம் நஞ்சுண்ட ராவுக்குச் சொந்தமான மயிலாப்பூர் பங்களாவின் பின்புறம் விருந்தினர் இல்லமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த 'கிரேஸ் ஹவுஸ்' தான்.

பன்முகச் செயல் திறம் வாய்ந்த நஞ்சுண்ட ராவின் சொந்த ஊர் அந்த கால மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த நஞ்சன்கூடு கிராமம். மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த அவர், படிப்பில் கெட்டிக்கார மாணவனாக விளங்கியதால் மைசூர் அரசரின் உபகாரச் சம்பளம் பெற்று உயர் கல்வியைத் தொடர முடிந்தது. பெங்களூரு மத்தியக் கல்லூரியில் வேதியியல் பட்டம் பெற்ற பிறகும் மருத்துவப் பணியின் மீது அவருக்கு இருந்த ஆர்வம் அவரை சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்த்தது. அவரது மருத்துவக் கல்விக்கும் மைசூர் சமஸ்தானமே உதவி செய்தது. மருத்துவக் கல்லூரியில் படித்துத் தேறியபின் சென்னையிலேயே தமது மருத்துவத் தொண்டைத் தொடர்ந்தார், நஞ்சுண்ட ராவ்.

தேர்ச்சி மிக்க அவரது மருத்துவப் புலமை வெகு விரைவிலேயே அவரை ஒரு கைராசி மிக்க டாக்டராகப் பிரபலமடையச் செய்துவிட்டது. அவர் காலத்தில் சென்னையில் வசித்த செல்வந்தர்கள், உயர் அதிகாரிகளான ஆங்கிலேய துரைமார்கள், தமிழ் நாட்டிலும் அண்டையிலுள்ள ஆந்திரத்திலும் இருந்த ஜமீந்தார்கள் எனப் பலரும் அவரைத் தங்களின் குடும்ப டாக்டராக்கிக் கொண்டனர். மைசூர் சமஸ்தான அரச குடும்பமும் நஞ்சுண்ட ராவைத் தம் டாக்டராக ஏற்று, அவருக்கு ஆஸ்தான மருத்துவர் என்கிற பதவியை அளிக்க முன் வந்தது. ஆனால் தமக்கு மருத்துவக் கல்வியைப் புகட்டிய சென்னையில் மருத்துவத் தொண்டு செய்வதுதான் முறை என்று அந்தப் பதவியை ஏற்க மறுத்து, அரச குடும்பத்திற்கும் பிரதானியர் குடும்பங்களுக்கும் டாக்டராகப் பணியாற்றும் பொறுப்பை மட்டும் சென்னையிலிருந்தவாறே நிறைவேற்றினார், நஞ்சுண்டராவ்.

தொடக்க முதலே வித்தியாசமான டாக்டராக விளங்கினார், ராவ். மேற்கத்திய அல்லோபதி வைத்திய முறையைப் பயின்ற போதிலும், நமது மண்ணுக்கே உரித்தான ஆயுர்வேத மருத்துவத்தையும் தமது சிகிச்சை முறையில் இணைத்து வெற்றி கண்டார். தாமே ஆராய்ச்சி செய்து சில மருந்துகளையும் தயாரித்துப் பயன்படுத்தினார். நோயாளிகளை குணப்படுத்துவதில் அந்த மருந்துகள் சிறப்பாகச் செயல்பட்டன. சீமான்கள் அள்ளித் தந்த பணத்தைத் தாமே அனுபவித்து சுகமாக வாழாமல் பல பொதுநலப் பணிகளை மேற்கொண்டதோடு, வறியவர்களுக்கு இலவசமாக மருத்துவ உதவியும் வழங்கலானார்.

அழகுணர்ச்சி மிகுந்த நஞ்சுண்டராவ் கலைநயம் மிக்க பிரமாண்டமான கட்டிடங்களைக் கட்டுவதில் அலாதியான ஆர்வம் கொண்டிருந்தார். பார்த்த மாத்திரத்தில் இது டாக்டர் ராவ் கட்டியது என்று சொல்லி விடத் தக்கதாய் அவர் கட்டிய பங்களாக்கள் ஏறத்தாழ ஒரே பாணியில் சிவப்பு வண்ணத்தில் காட்சியளித்தன.


மலர்மன்னன்

சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் பாரதியார் தமது இறுதிக் காலத்தைக் கழித்துக் கண் மூடியது நஞ்சுண்ட ராவ் கட்டிய சிவப்புச் சாயம் பூசிய பிரமாண்டமான வீட்டின் ஒரு பகுதியில் தான். சென்னை மயிலையில் தெப்பக் குளத்தை ஒட்டிய கிழக்கு மாட வீதியில் அவர் தமக்கென கட்டிக் கொண்ட சசி விலாசமும் சிவப்பு மாளிகையாய் அண்மைக் காலம் வரை அனைவரையும் கவர்ந்து வந்தது.

விவேகானந்தர் அமெரிக்கா செல்லுமுன் 1893-ல் சென்னை வந்த சமயம் அவரது தனிச் சிறப்பை அடையாளங் கண்டு உபசரித்து அவரது முதல் வரிசைச் சீடராக அங்கீகாரம் பெற்றவர், நஞ்சுண்ட ராவ்.

தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்துவந்த ராவ், சென்னை அரசின் ரசாயனக் கூடத்தில் பரிசோதகராகவும் பணியாற்றி வந்தார். அரசு அலுவலராக இருந்தபோதிலும், தமக்குள் கனன்ற தேசிய உணர்வை அவர் அடக்கிக் கொள்ளவில்லை. விபின் சந்திர பால் உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் பலரும் சென்னை வந்தபோது அவர்களைத் தமது இல்லத்திற்கு வரவழைத்து உபசரிப்பதை அவர் கடமையாகக் கொண்டிருந்தார். விடுதலைப் போராட்ட காலத்தில் சரோஜினி நாயுடு, நஞ்சுண்ட ராவ் பங்களாவைத் தமது பிறந்தகமாகவே சொந்தம் கொண்டாடியவர். அங்குள்ள விருந்தினர் இல்லத்தில்தான் தம் மகள் பத்மஜா நாயுடுவை அவர் பெற்றெடுத்தார்!

சென்னைக் கடற்கரையில் விபின் சந்திர பால் பேசிய கூட்டத்தில் பாரதியார் தாம் இயற்றிய விடுதலை வேட்கைப் பாடல்களை கம்பீரமாகப் பாடக் கேட்டு அவரிடம் மனதைப் பறிகொடுத்த நஞ்சுண்ட ராவ், பாரதியாருடன் தொடர்ந்து நட்புறவாடலானார். பாரதியாரிடம் புதைந்து கிடந்த திறமைகளை இனங் கண்டு, 1907-ல் 'பால பாரதா' அல்லது 'யங் இந்தியா' என்ற பெயரில் படித்த இளைஞர்களுக்கான ஆங்கில இதழ் ஒன்றைத் தொடங்கி, பாரதியாரை அதன் ஆசிரியர் பொறுப்பில் அமர்த்தினார். இவ்வளவுக்கும் அப்போது பாரதியாரின் வயது 25 தான்! விவேகானந்தர் இளைஞர்களுக்கு விடுத்த 'விழிமின், எழுமின், கருதிய கருமம் கைகூடும் வரை சலியாது உழைமின்' என்ற அறைகூவலையே கொள்கை முழக்கமாகக் கொண்டு வெளிவந்தது 'பால பாரதா.'

தமது சதந்திர ஆவேசத்திற்கு வடிகாலாக அமையவியலாத

## குயில் கிடைக்குதா?



**பா**ரதிதாசன் நாகை மாவட்டம் முத்துப்பேட்டையில் ஒரு திருமண விழாவிற்குச் சென்றிருந்தார். அருகில் இருந்தவரிடம், "இந்தப் பக்கமெல்லாம் குயில் கிடைக்குதா?" என்று கேட்டார். அதற்கு அவர், "எங்கங்க கிடைக்குது? இந்தப் பக்கம் இருந்த காட்டைத்தான் வெட்டிப் புட்டானுங்களே..... ஏதோ காடை கவுதாரிதான் கிடைக்குது!" என்றார் வருத்தத்துடன். பாரதிதாசன் கேட்டது அவர் நடத்திக் கொண்டிருந்த "குயில்" பத்திரிகை பற்றி!

**(நூல்: வாழ்க்கையில் வெற்றி.)**

**தகவல்: வே.செல்வகணேசன்**

சுதேசமித்திரன் நாளிதழிலிருந்து வெளியேறி, 'இந்தியா' என்ற இதழிலும், பெண்கள் விழிப்புணர்ச்சிக்கான 'சக்ரவர்த்தினி' என்ற இதழிலும் பணியாற்றி வந்தபோதே 'பால பாரதா'வையும் கவனித்துக் கொண்டார், பாரதியார். அந்தச் சமயத்தில்தான் அவரது எழுத்தில் ராஜதுவேஷ நெடி வீசுவதை முகர்ந்து, முகம் வெளுத்து, அவரைக் கைது செய்ய முனைந்தது, சென்னை அரசாங்கம்.

போலீஸ் பாரதியாரைத் தேடுகிறது என்று தெரிய வந்ததும் அவரைத் தலைமறைவாக இருக்குமாறும் பிரஞ்சு காலனியாக இருந்து வந்த புதுச்சேரிக்குத் தப்பிச் சென்றுவிடுமாறும் நண்பர்கள் ஆலோசனை கூறத் தொடங்கினார்கள். நஞ்சுண்டராவ் தமது இல்லம்தான் அவரை பத்திரமாகப் பாதுகாக்கக் கூடிய இடம் என்று கருதினார். பாரதியார் அதற்கு இணங்கி ராவின் விருந்தினர் இல்லத்தில் தங்கினார்.

**பா**ரதியார் நஞ்சுண்ட ராவின் பாதுகாப்பில் இருப்பதை எப்படியோ மோப்பம் பிடித்துவிட்ட போலீசார், ஓர் இரவு அவர் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். நஞ்சுண்டராவ் அரசாங்க உயர் பதவியில் இருப்பதோடு, பல ஆங்கிலேய துரைமார்களின் குடும்ப டாக்டராகவும் இருப்பவர் என்பதால் போலீசார் அவர் வீட்டை சோதனையிடத் துணியவில்லை. போலீசார், பாரதியார் தேடப்படுவதாகவும் அவர் அங்கு இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதால் அது பற்றி விசாரிக்க வந்துள்ளதாகவும் தயக்கத்துடன் தெரிவித்தனர். அப்படி யாரும் இங்கு இல்லை என்று கண்டிப்பாகக் கூறி போலீசாரை அனுப்பிவைத்தார், நஞ்சுண்டராவ்.

அப்போதைக்குப் போலீசாரைத் திருப்பி அனுப்பிவிட்ட போதிலும் இனி பாரதியாரை மறைத்து வைப்பது சாத்தியமில்லை என உணர்ந்த அவர், உடனே பாரதியாரைப் புதுச்சேரிக்கு அனுப்பி வைப்பதுதான் புத்திசாலித்தனம் என்று புரிந்துகொண்டார். அவரது வீட்டின் சுற்றுச் சுவருக்குப் பின்னால்தான் பக்கிங்காம் கால்வாய் அமைந்திருந்தது. அன்று அது தெளிவான நீரோட்டமாக, சரக்குப் போக்குவரத்திற்கும் பயணிகள் செல்வதற்கும் ஏற்ற நீர் வழிப் பாதையாகப் பறங்கிப்பேட்டை வரை நீண்டு கிடந்தது.

இரவோடு இரவாக ராமன் நாயர் என்ற உடல் வலிமை மிக்க பணியாள் துணையுடன் பாரதியாரை பக்கிங்காம் கால்வாய் வழியாகப் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தார், நஞ்சுண்டராவ். செப்டம்பர் மாதக் குளிர் இரவில் படகுப் பயணத்தின்போது அடக்கமாக இருக்கும் என்று தமது கோட்டையும் அணிவித்து பாரதியாரை வழியனுப்பினார். பாரதியாரை மரக்காணத்தில் கரையிறக்கி, புதுவையில் அவரை பத்திரமாகச் சேர்ப்பித்து விட்டுத் திரும்பினார் விசுவாசமிக்க ராமன் நாயர்.

நஞ்சுண்ட ராவ் ஓர் அரசு அலுவராக இருந்தமையால் அவருக்கு எவ்விதச் சங்கடமும் ஏற்பட்டு விடலாகாது என்பதால்தான், அவரது உதவியால் பாரதியார் புதுவைக்குத் தப்பிச் சென்றார் என்ற தகவல் வேண்டுமென்றே மறைக்கப் பட்டிருக்கக்கூடும் என்று நாம் கருதலாம்.

1962-ல் நஞ்சுண்டராவின் நூற்றாண்டின்போது அவரது நினைவாக அவருடைய பேரர் ஜி.கே. தாமோதர ராவ் ஆங்கிலத்தில் 'குளோரியஸ் இயர்ஸ்' என்ற தலைப்பில் ஒரு சிறுநூலை எழுதினார். நஞ்சுண்டராவ் அறக்கட்டளை அதனை வெளியிட்டது. இச்சிறு நூலில்தான் நஞ்சுண்டராவ் உதவியுடன் பாரதியார் பக்கிங்காம் கால்வாய் வழியாகப் புதுச்சேரிக்குத் தப்பிச் சென்ற தகவல் பதிவாகியுள்ளது.

தேசிய உணர்வு மிக்க நஞ்சுண்டராவ், ஆன்மிக நாட்டத்திலும் ஆர்வம் மிகுந்திருந்தார். தற்போது புதுப்பேட்டை என்று அறியப்படும் சென்னை கோமளீஸ்வரன்பேட்டையில் ஸ்ரீ சக்கர உபாசனை செய்து சித்திகள் பலவும் கைவரப்பெற்று, ஸ்ரீ சக்கரத்தம்மா என்றே அழைக்கப்பட்டு வந்த பெண் சித்தரைத் தம் குருவாக வரித்து, அவர் மறைந்தபின் திருவான்மியூரில் அவருக்கு சமாதியும் அமைத்தார், ராவ். கலாக்ஷேத்ரா சாலையும் காமராஜர் சாலையும் இணையும் இடத்திற்கு அருகில் உள்ள அந்தச் சமாதி, 'ஸ்ரீ சக்கரையம்மன் கோவில்' என்று மக்கள் மொழியில் அழைக்கப்பட்டு, ஓர் எழிலான நந்தவன ஆலயமாக நஞ்சுண்ட ராவின் சந்ததியாரான, திரு சுரேஷ் - திருமதி சுமனா ஆகியோரின் சீரான பராமரிப்பில் இன்றளவும் மக்களை ஈர்த்து வருகிறது. ●